பெப்ரவரி 24 – மார்ச் 2

**பாடம் 9**

# நன்றிப்பெருக்கின் காணிக்கைகள்

**மனன வசனம்**

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.**

**ஆராய்ச்சிக்கு**

**மத்தேயு 6:19-21; எபேசியர் 2:8; 1பேதுரு 4:10; லூக்கா 7:37-47; 2கொரிந்தியர் 8:8-15; 2கொரிந்தியர் 9:6,7.**

பெப்ரவரி 24 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



நம் தேவன் கொடுக்கிற ஒரு தேவன்; இந்த மகத்தான உண்மையை இயேசு நமக்காகப் பலியானதில் தெளிவாகக் காணலாம். 'தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.' யோவா 3:16. 'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா.' லூக்கா 11:13.

தேவன் கொடுக்கிறார்; கொடுத்துக்கொண்டே இருக்கிறார்; அதுதான் அவருடைய குணம். அந்தக் குணத்தைப் பிரதிபலிக்க விரும்புகிற நாமும் கொடுக்க வேண்டும். 'சுயநலக் கிறிஸ்தவன்' என்பதைவிட மிக மோசமான ஒரு சொற்றொடர் இருக்கமுடியாது.

தேவன் நமக்குத் தந்ததிலிருந்து திரும்பக் கொடுக்கிற ஒன்றுதான் காணிக்கை. நம் நன்றிப்பெருக்கையும் அன்பையும் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பை காணிக்கை உருவாக்குகிறது. மீட்கப்பட்டவர்களை இயேசு பரலோகத்திற்குள் வரவேற்கிற நாளில், அவருடைய கிருபையை ஏற்றுக்கொண்டவர்களை நாம் காண்போம்; அந்த ஆத்துமாக்கள் கிருபையை ஏற்றுக்கொள்வதற்கு, நாம் அர்ப்பணிப்போடு கொடுத்த காணிக்கை உதவியாக இருந்ததையும் அன்று அறிந்துகொள்வோம்.

காணிக்கையின் மிகமுக்கிய அம்சங்களை இந்த வாரம் ஆராய்வோம். நம் வளங்களையும் நேரத்தையும் தாலந்தையும் தாராளமாகக் கொடுக்கும்போது, நம் விசுவாசத்தை பலத்த விதத்தில் வெளிப்படுத்துகிறோம்; நாம் சேவிக்கிற தேவனுடைய குணத்தை வெளிப்படுத்துகிறோம்.

*2017, மார்ச் 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ‘உங்கள் பொக்கிஷம் எங்கேயோ’

***மத்தேயு 6:19-21 வசனங்கள் நமக்கு மிகவும் பரிச்சயமானவை. ஆனாலும், உலக ஐசுவரியங்கள் நம்மை இரும்புப்பிடியாகப் பிடித்துவிடாதிருக்க, நாம் என்ன செய்யலாம்? கொலோ 3:1,2.***

---

‘உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்’ என்று இயேசு சொல்கிறார். மத் 6:21. முந்தின இரு வசனங்களையும் வாசித்தால், இந்த வசனத்தின் தீவிரத் தன்மை புரியும்; பூமியில் பொக்கிஷங்களைச் சேர்ப்பது எப்படிப்பட்டது என்பதும், பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்ப்பது எப்படிப்பட்டது என்பதும் அங்கு விளக்கப்படுகிறது. பூச்சி, துரு, கள்ளர் என்று பூமிபற்றிச் சொல்லப்படுகிறது. மத் 6:19. பூலோகப் பொக்கிஷம் தற்காலிகமானது, கடந்துபோகக் கூடியது. இந்த உண்மை புரியாதவர்கள் யாருமே இருக்கமுடியாது. ‘பூமியில் எல்லாமே நிலையில்லாமலும், நிச்சயமில்லாமலும், பாதுகாப்பில்லாமலும் இருக்கின்றன; அழுகலாம், அழியலாம், களவுபோகலாம், தொலையலாம். பரலோகம் இதற்கு எதிர்மாறானது: எல்லாமே நித்தியமானது, நீடித்திருப்பது, பாதுகாப்பானது, அழியாதது. பரலோகத்தில் இழப்பே கிடையாது.’ – சி. அடெலினா அலெக்ஸெ, *Beyond Blessings, p 22.*

உங்களிடம் கொஞ்சமோ, அதிகமோ ஆஸ்தி இருக்கலாம்; இப்போதோ பிறகோ அது கரைந்துவிடும். பரம்பரைச் சொத்துகள் வேண்டுமானால் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். ஆனால், ஞானமுள்ள ஓர் உக்கிராணக்காரன் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்க்க அக்கறை காட்டுவான். இங்குபோல அங்கு கிடையாது; கரைந்துபோகுமோ, திருடுபோகுமோ, கொள்ளைபோகுமோ என்கிற பயம் தேவையில்லை.

உக்கிராணத்துவம்குறித்த மிகமுக்கியக் கருத்துகளில் ஒன்று மத் 6:19–21இல் உள்ளது. உங்கள் பொக்கிஷம் உங்களை இழுத்து, தள்ளி, கட்டாயப்படுத்தி, கவர்ந்து, கெஞ்சிக்கேட்டு, மயக்கி உங்கள் இருதயத்தைக் கட்டுப்படுத்த விரும்புகிறது. இது பொருளாசை உலகம்; ஆஸ்திகளை நாடித்தான் இருதயம் செல்லும். எனவே, உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது என்பது முக்கியமானது. பூலோகத் தேவைகளையும் ஆதாயங்களையும் குறித்தே சிந்தித்துக்கொண்டிருந்தால் பரலோக விஷயங்கள்குறித்துச் சிந்திப்பது கடினமாகிவிடும்.

தேவன்மேல் விசுவாசம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டே, பூமியில் பொக்கிஷத்தையும் சேர்க்க முயல்வது மாய்மாலம். நாம் சொல்கிறபடியே நம் செயல்களும் இருக்கவேண்டும். அதாவது, பூமியிலுள்ள பொக்கிஷங்கள்தாம் நம் கண்களுக்குத் தெரிகின்றன; ஆனால், நம் காணிக்கையானது பரலோகத்தில் பொக்கிஷமாகச் சேர்வதை விசுவாசக் கண்ணால் காணவேண்டும். 2கொரி 5:7. நடைமுறை வாழ்க்கை ஒன்று இருப்பதும் உண்மைதான்; நம் தேவைகளையும் நாம் சந்தித்தாக வேண்டும்; பணி ஓய்வுக்கு பிறகானதும்கூட. ஆனாலும், நித்திய வாழ்க்கையை மனதில் வைத்திருந்து செயல்படுவது எப்போதும் முக்கியமானது.

---

பூலோகத்தில் பொக்கிஷம் சேர்ப்பதையும், பரலோகத்தில் பொக்கிஷம் சேர்ப்பதையும் வித்தியாசப்படுத்தி எபி 10:34இல் பவுல் சொல்லும் கருத்து என்ன?

***வேறு எதையும் தேவன் நமக்குத் தந்திருப்பதாக எபே 2:8 கூறுகிறது?***

---

'தகுதியற்றவர்களுக்குக் காட்டப்படும் தயவே' கிருபை. தேவன் இவ்வுலகத்தின்மேல் தம் கிருபையை ஊற்றியிருக்கிறார்; அதை நாம் பெற்றுக்கொள்ள மறுக்காதபட்சத்தில், அவர் கிருபை நம்மை வந்தடையும்; இன்றும் என்றுமாக நம் வாழ்க்கை மாறும். பரலோகத்தின் ஐசுவரியம், வல்லமை அனைத்தையும் கிருபையில் பொதிந்து வழங்குகிறார். 2கொரி 8:9. இந்த அற்புத ஈவைக் கண்டு, தேவதூதர்களும் ஆச்சரியமடைகிறார்கள். 1பேதுரு 1:12.

தேவன் நமக்குத் தந்துள்ள அனைத்து ஈவுகளிலும், இயேசு கிறிஸ்துவில் அவர் காண்பித்திருக்கும் கிருபைதான் மிகவும் விலையேறப்பெற்றது. கிருபை இல்லையேல் நமக்கு நம்பிக்கை இல்லை. பாவமானது மனித இனத்தின்மேல் மிகக்கொடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது; மனிதர்கள் அதிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள திராணியற்றவர்கள். தேவ பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதுகூட நமக்கு ஜீவனைப் பெற்றுத்தர போதுமானதாக இல்லை. 'அப்படியானால், நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே.' கலா 3:21. ஆனால், நம்மை இரட்சிக்கக்கூடிய ஒரு பிரமாணம் இருக்குமானால், அது தேவனுடைய பிரமாணமாகத்தான் இருக்கமுடியும். ஆனால், அதனால்கூட நம்மை இரட்சிக்க முடியவில்லை என்று பவுல் கூறுகிறார். நாம் இரட்சிக்கப்படவேண்டுமானால் அது கிருபையால்மட்டுமே சாத்தியம்.

***உக்கிராணத்துவம் எவ்வாறு கிருபையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது? 1பேதுரு 4:10. தேவனுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கும்போது, எவ்வாறு கிருபையை வெளிப்படுத்துகிறோம்?***

---

தேவகிருபையாகிய ஈவை நாம் பெற்றிருப்பதால், நாம் நல்ல உக்கிராணக்காரர்களாக 'தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும்'படி பேதுரு கூறுகிறார். 1பேதுரு 4:10. அதாவது, தேவன் நமக்கு ஈவுகளைத் தந்திருக்கிறார்; தேவன் நமக்குத் தந்தவற்றிலிருந்து நாம் எடுத்துக் கொடுக்கவேண்டும். கிருபையால் நாம் பெற்றவை நம்மைப் பிரியப்படுத்தவோ, நம் நன்மைக்காகவோ நாம் பெறவில்லை; மாறாக, நற்செய்தியை அறிவிப்பதற்காகப் பெற்றிருக்கிறோம். இலவசமாக நமக்குக் கொடுக்கப்பட்டது; அதுதான் கிருபை. அதை நம்மால் முடிந்தவிதங்களில் எல்லாம் இலவசமாகக் கொடுக்கவேண்டும்.

தேவன் உங்களுக்கு என்னவெல்லாம் கொடுத்திருக்கிறார்? இலவசமாக உங்களுக்கு அவர் கொடுத்தவற்றை நல்ல உக்கிராணக்காரராக எவ்விதங்களில் பயன்படுத்துவீர்கள்?

---

## நமது உச்சிதமான காணிக்கை

***தேவனுக்கென்று சரியான நோக்கங்களுடன் நாம் காணிக்கை கொடுக்கவேண்டும் என்பது பற்றி லூக்கா 7:37-47இன் சம்பவம் என்ன கூறுகிறது?***

---

---

மரியாள் அந்த அறைக்குள் பிரவேசித்தபோது, இயேசு மேசையின்மேல் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். விலையுயர்ந்த பரிமளதைலப் பரணியை உடைத்து, அவர்மேல் ஊற்றினாள். அவள் முறைகேடான வாழ்க்கை வாழ்ந்துவந்ததால், அவள் அவ்வாறு செய்யத் தகுதியற்றவள் என்று சிலர் நினைத்தார்கள்.

ஆனால், பிசாசுகளின் பிடியிலிருந்து இயேசு அவளை விடுவித்திருந்தார். லூக்கா 8:2. பிறகு, லாசருவை அவர் உயிர்தெழச் செய்திருந்ததால், அந்த நன்றிப் பெருக்கும் அவளில் நிறைந்திருந்தது. அவளிடம் இருந்ததில் விலையுயர்ந்தது அந்தத் தைலம்; அதைக் கொடுத்து, இயேசுவுக்கு நன்றிசொன்னாள்.

காணிக்கை கொடுப்பதற்கு எது தூண்டுதலாக இருக்கவேண்டுமென இந்தச் சம்பவம் கூறுகிறது. அதாவது நன்றியுணர்வு. தேவ கிருபையின் ஈடுஇணையற்ற ஈவைக் காணும்போது, வேறு என்ன உணர்வு உண்டாகமுடியும்? அவர் தாராள மாகக் கொடுத்திருப்பது, நம்மையும் கொடுக்கத் தூண்டுகிறது. இந்த உணர்வும் நன்றியுணர்வும் சேர்ந்து நம் நேரம், தாலந்து, ஆஸ்தி, சரீரம் உட்பட அனைத்தை யும் அர்த்தமுள்ளவிதத்தில் அவருக்குக் காணிக்கையாகக் கொடுக்கவைக்கின்றன.

***யாத் 34:26; லேவி 22:19-24; எண் 18:29 ஆகிய வசனங்கள் சொல்லும் விஷயங்கள் இன்றைய சூழலுக்குப் பொருந்தாமல் இருக்கலாம்; ஆனால் நாம் காணிக்கை கொடுக்கும் விஷயத்தில் அங்கே உள்ள என்ன நியதி உதவியாக இருக்கும்?***

---

நம்முடைய உச்சிதமான காணிக்கைகள் மதிப்புகுறைந்தவையாக நம் கண் களுக்குத் தெரியலாம்; ஆனால், நம் தேவனுக்கு அவை விலையுயர்நதவை. உச்சி தமானதை தேவனுக்குக் கொடுக்கும்போது, நம் வாழ்க்கையில் அவருக்கு முத லிடம் கொடுப்பதைக் காட்டுகிறோம். தயவுகாட்டுவார் என்று நினைத்து நாம் காணிக்கை கொடுப்பதில்லை; மாறாக, கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் பெற்றுக் கொண்டவற்றிற்காக நன்றியுணர்வுடன் கொடுக்கிறோம்.

‘ நாம் கொடுக்கும் காணிக்கை சிறிதானாலும், நன்றிப்பெருக்கால் உண்டா கும் அர்ப்பணிப்பும் ஈகையும் அதை உற்சாகப் பலியாகவும் தேவனுக்குச் சுகந்த வாசனையாகவும் மாற்றும்; அதை ஈடுஇணையற்ற மதிப்புள்ளதாக்கும். தேவனுக்கு நாம் நன்றிகடன்கட்டிருப்பதை உணர்ந்து, நம்மால் கொடுக்க முடிந்தவற்றை நம் மீட்பரிடம் மனப்பூர்வமாகக் கொடுக்கும்போது, அவை மதிப்பு மிக்கவையாக இருந்தாலும்கூட, நாம் அவருக்குக் கொடுப்பதெல்லாம் மிகச்சொற்பமென்று புரிந்துகொள்வோம். நம் காணிக்கை நமக்கு அற்பமாகத் தோன்றினாலும், தூதர் கள் அதை எடுத்துச்சென்று, சுகந்த வாசனையாக சிங்காசனத்திற்குமுன் வைக் கிறார்கள்; தேவன் அதை ஏற்றுக்கொள்வார்.’ - *EGW, 3T, p 397.*

அந்த ஏழை விதவை உதாரத்துவமாகக் காணிக்கைகொடுத்ததாக முந்தின ஒரு பாடத்தில் பார்த்தோம். மற்ற காணிக்கைகளோடு ஒப்பிடும்போது, தொகை சிறியதாக இருக்கலாம்; ஆனால் அது உதாரத்துவமானது; அவளுடைய குணமும் சிந்தையும் அதில் வெளிப்பட்டது; அதனால்தான் இயேசுதாமே, ‘‘இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள்’’ என்று சொன்னார்.

நம்முடைய உண்மையான நோக்கங்களை தேவன்மட்டுமே அறிவார். நீதி 16:2; 1கொரி 4:5. தவறான நோக்கங்களோடு சரியானவற்றைச் செய்ய வாய்ப் பிருக்கிறது. நம்மிடம் ஏராளம் இருக்கும்போது, கொடுப்பதற்கு விசுவாசம் தேவையில்லை. ஆனால், பிறர் நன்மைக்காக தியாக மனப்பான்மையோடு கொடுப்பதுதான் நம் இருதயங்களை மிகத்தெளிவாக வெளிப்படுத்துகிறது.

***கொடுப்பதுகுறித்தும், கொடுப்பதின் நோக்கங்கள்குறித்தும் 2கொரி 8:8-15இல் பவுல் சொல்வது என்ன? உக்கிராணத்துவம் குறித்த என்ன நியதிகள் இவ்வசனங்களில் உள்ளன?***

கொடுப்பதற்கு பல்வேறு நோக்கங்கள் இருக்கலாம். அகங்காரத்தோடு கொடுக்கலாம்; பிறர்நலன் பேணவும் கொடுக்கலாம். சுயநலத்திற்கும், பிறருக்குக் கொடுப்பதற்கும் இடைப்பட்ட இந்தப் போராட்டம்தான் மற்ற அனைத்து ஆவிக்குரிய போராட்டங்களிலும் அதிகமாகப் போராடப்படுவதாகும். தேவனுக்காக அனலாக இருந்த இருதயம்கூட சுயநலத்தால் பனிபோல உறையக்கூடும். நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தில் சுயநலத்தை நுழையவிடும்போது பிரச்சனை உருவாகிறது. அதாவது, சுயநலத்தை நியாயப்படுத்தவும், அதற்குக் கிறிஸ்தவ சாயம் பூசவும் நாம் வழிகளைத் தேடுகிறோம்.

அன்புமட்டுமே கொடுப்பதின் நோக்கமாக இருக்கவேண்டும். சுயத்தை மறுக்காமலும், பிறர் நன்மைக்காக தன்னையே கொடுக்க முன்வராமலும், தன்னையே தியாகம்செய்யாமலும் அந்த அன்பை வெளிப்படுத்தமுடியாது.

தேவனுடைய அன்பு நம் வாழ்க்கையில் பிரதிபலிக்காதபட்சத்தில், நாம் கொடுப்பதிலும் தேவ அன்பு பிரதிபலிக்காது. ஒரு சுயநல இருதயத்தால் தன்னை மட்டுமே நேசிக்கமுடியும். ‘உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணும்படி’ நாம் தேவனிடம் கேட்கவேண்டும்; அப்போதுதான், தேவன் நம்மில் அன்புகூர்வதுபோல பிறரிடம் நாம் அன்புகூரமுடியும். உபா 10:16.

அன்புதான் உண்மையான நற்செயல்கள் அனைத்திற்கும் அடிப்படை; கிறிஸ்தவர்களின் தர்மச்செயல்களுக்கும் அன்புதான் அடிப்படை. தேவன் நம்மேல் காட்டுகிற அன்பானது, மற்றவர்கள்மேல் நாம் அன்புகாட்ட ஊக்குவிக்கவேண்டும்; பிறருக்கு நாம் கொடுப்பதற்கும், இந்த அன்பே காரணமாக இருக்கவேண்டும்.

உற்சாகப் பலியை அன்பினால் செலுத்தாமல், கடமைக்காகச் செலுத்துவதிலுள்ள தவறு என்ன?

## கொடுக்கிற அனுபவம்

தேவனுடைய குணத்தை வெளிப்படுத்தவே கிறிஸ்து வந்தார்; எனவே, தேவன் அன்பானவர் என்பதும், நமக்கு எது சிறந்ததோ அதைத் தரவே அவர் விரும்புகிறார் என்பதும் அதன்மூலம் தெளிவாகிறது. அவர் நம்மைச் செய்யச் சொல்வது நம்முடைய நன்மைக்காக இருக்குமேதவிர, கெடுதலுக்காக இருக்காது. தேவனே நமக்குத் தந்தவற்றிலிருந்து உற்சாகமாகவும் தாராளமாகவும் அவர் கொடுக்கச்சொல்வதும் அதற்காகத்தான். உற்சாகமாகவும் தாராளமாகவும் கொடுக்கும் காணிக்கை யாரைச் சேருகிறதோ அவருக்குப் பயன்படுவதுபோல, நமக்கும் அதிக நன்மையை உண்டாக்குகிறது. இவ்வாறு கொடுக்கிறவர்கள், வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே அதிக ஆசீர்வாதமானது என்பதை தாங்களே கண்டுகொள்வார்கள்.

***எப்படிப்பட்ட சிந்தையோடு நாம் கொடுக்கவேண்டுமென 2கொரி 9:6,7 கூறுகிறது?***

---

---

தாராளமாகக் காணிக்கை கொடுப்பது ஒரு தனிப்பட்ட, ஆவிக்குரிய செயலாக இருக்கவேண்டும். இது விசுவாசத்தால் உண்டாகும் ஒரு செயல்; கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்குக் கொடுத்தவற்றை எண்ணி நன்றியால் வெளிப்படுவதாகும்.

விசுவாசத்தின் மற்றச் செயல்கள்போலவே கொடுப்பதும் விசுவாசத்தை அதிகரிக்கிறது; ஏனென்றால், 'கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது.' யாக் 2:20. விசுவாசத்தின்படி வாழ்வதுதான் நம் விசுவாசத்தை வளர்ப்பதற்கான சிறந்த வழியாகும். அதாவது, நம் விசுவாசத்தை வெளிப்படச் செய்கிற செயல்களைச் செய்யவேண்டும். நாம் தாராளமாகவும் உற்சாகமாகவும் கொடுக்கும்போது, கிறிஸ்துவின் குணத்தை நமக்குத் தெரிந்த வழியில் வெளிப்படுத்துகிறோம். நம் செயல்களால் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அனுபவித்து அறிந்துகொள்கிறோம். இத்தகைய சிந்தையோடு கொடுப்பதே தேவன் மேலுள்ள நம்பிக்கையை வளர்க்கும்; 'கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்' என்பதைக் கண்டுகொள்கிற வாய்ப்பை உருவாக்கும். சங்கீதம் 34:8.

'இயேசுவின் முகத்தில் ஜொலிக்கிற மகிமையானது, சுயத்தைத் தியாகம்செய்த அன்பின் மகிமை என்பது தெரியவரும். சுயத்தைப் புறக்கணிக்கிற அன்புதான் பூலோக, பரலோக வாழ்விற்கான பிரமாணம். 'தற்பொழிவை நாடாத' அன்பு தேவனுடைய இருதயத்திலிருந்து உருவாகிறது. ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்செய்கிறவருடைய குணமானது சாந்தமும் மனத்தாழ்மையும் பெற்றிருந்த ஒருவர்மூலம் வெளிப்பட்டது. இவை அனைத்தும் கல்வாரியின் வெளிச்சத்தில் புலப்படும்.' – *EGW, DA, p 20.*

---

தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ளவற்றிலிருந்து தாராளமாகவும் உற்சாகமாகவும் கொடுப்பதால் விசுவாசம் வளருகிறதென்கிற உண்மையை எவ்விதங்களில் எல்லாம் நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள்?

‘தயாளகுண ஆவியானது பரலோகத்தின் ஆவியாகும். சுயநல ஆவியானது சாத்தானுடைய ஆவியாகும். கிறிஸ்துவின் சுயதியாக அன்பானது சிலுவையில் வெளிப்படுகிறது. மனிதனை இரட்சிக்கும்படி தம்மிடம் இருந்ததை எல்லாம் அவர் கொடுத்துவிட்டு, பிறகு தம்மையே கொடுத்தார். இரட்கரைப் பின்பற்றுகிற ஒவ் வொருவரும் தயாள குணமுள்ளவர்களாக நடக்கும்படி கிறிஸ்துவின் கிருபை வேண்டுகிறது. கொடுங்கள், கொடுங்கள் என்கிற நியதி அங்கு எடுத்துக்காட்டப் படுகிறது. மெய்யான இரக்கத்தோடு கொடுப்பதும், நற்கிரியைகளைச் செய்வதுமே கிறிஸ்தவ வாழ்க்கையின் மெய்யான கனியாகும். வாங்கு, வாங்கு என்பது உலக நியதி; அதன்மூலம் உலகத்தார் சந்தோஷத்தைப் பெற முயல்கிறார்கள்; இத்தகைய மனநிலைகளோடு நடப்பது வேதனையையும் மரணத்தையும் கொண்டுவரும்.’ - *EGW, ARSH, Oct. 17, 1882.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *சுயநலம் எவ்வாறு கிறிஸ்துவின் சிந்தைக்கு முரணாக இருக்கிறது? விழுந்துபோன மனிதனின் இயல்பான சுபாவம் சுயநலமாக இருந்தாலும், எத்தகைய உள்ளுணர்வுகள் அதிலிருந்து நம்மைப் பாதுகாக்கக்கூடும்?*

2. *அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி 9:7. இங்கு உற்சாகம் என்று வரும் வார்த்தைக் கான கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுமே வருகிறது; இதற்கு இணையான ஆங்கில வார்த்தைக்கு பெரும்களிப்போடு என்று அர்த்தம். அப்படியானால் கொடுக்கும்போது நம் மனநிலை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?*

3. *கிறிஸ்துவுக்குள் நீங்கள் பெற்றவற்றைப் பட்டியலிடுங்கள். பிறகு அவற் றுக்காக ஜெபியுங்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால் நாமும் திரும்பக் கொடுக்கும்படி இந்தப் பட்டியல் நமக்கு என்ன உணர்த்தவேண்டும்? அதேசமயம், மிகச்சிறந்த நோக்கங்களுக்காக நாம் செய்யும் மிகப் பெரிய தர்ம காரியம்கூட, நாம் பெற்றவற்றோடு ஒப்பிடும்போது ஒன்றுமில்லை என்பதை யும் அது எவ்வாறு உணர்த்தவேண்டும்?*

4. *சுயநலமானது உங்களை பரிதாப நிலைக்கு நிச்சயம் கொண்டுவரும் என்பதை எவ்வாறு ஆணித்தரமாகக் கூறலாம்?*

5. *உங்களுடைய சபைக்குடும்பத்தில் தற்சமயம் யாராவது ஏதாவது தேவையில் இருக்கிறார்களா? அவர்களுக்கு உதவும்படி தற்சயம் நீங்கள் என்ன செய்ய லாம்? சிலசமயங்களில் அவ்வாறு உதவுவதால், அது நமக்கு பெரிய வேத னையைக்கூட கொண்டுவரலாம்; ஆனாலும் எவ்வாறு உதவலாம்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*